செய்தி வெளியீடு எண்: 43 நாள்: 25.09.2017

***தேனி மாவட்டம்,***
***முல்லை பெரியாறு அணையிலிருந்து***
***முதல்போக பாசனத்திற்கான தண்ணீரை***
***மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் திறந்து வைத்தார்:-***

******

தேனி மாவட்டம், முல்லை பெரியாறு அணையிலிருந்து கம்பம் பள்ளத்தாக்கு இரு போக ஆயக்கட்டுப்பகுதிகளில் முதல்போக பாசனத்திற்கான தண்ணீரை இன்று (25.09.2017) மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ந.வெங்கடாசலம், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் திறந்து வைத்தார்.

தமிழக அரசின் உத்தரவின்படி, கம்பம் பள்ளத்தாக்கு ஆயக்கட்டு பகுதிகளில் முதல் போக சாகுபடிக்கு 14707 ஏக்கர் நிலங்களுக்கு பெரியாறு அணையிலிருந்து விநாடிக்கு 200 கனஅடி வீதம் இன்று (25.09.2017) முதல் 120 நாட்களுக்கு தண்ணீர் திறந்து விடப்படுகிறது. குறுகிய காலப் பயிர்களை நடவு செய்தும், தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தியும் பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இந்நிகழ்வின் போது, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.வீ.பாஸ்கரன் அவர்கள், தேனி பாராளுமன்ற உறுப்பினர் திரு.ஆர்.பார்த்திபன் அவர்கள், கம்பம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜக்கையன் அவர்கள், பொதுப்பணித்துறை பெரியாறு வைகை வடிநில கோட்ட செயற்பொறியாளர் திரு.சுப்பிரமணியன் அவர்கள், வேளாண்மைத்துறை இணை இயக்குநர் திரு.மூர்த்தி அவர்கள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு.சந்திரசேகரன் அவர்கள், உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் (பொ) திரு.கார்த்திகேயன் அவர்கள், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.ச.தங்கவேல் அவர்கள், பொதுப்பணித்துறை பெரியாறு வைகை வடிநில கோட்ட உதவி செயற்பொறியாளர் திரு.அன்புசெல்வன் அவர்கள், உத்தமபாளையம் வட்டாட்சியர் திரு.பாலசண்முகம் அவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி.**